மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ஆறுமுகம் (எ) சேகர் | நாள் | 27.09.2022 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**1 முதல் 6, 10 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை :-**

1) பெரியண்ணன் என்பவர் என் சகோதரர். அவர் தற்போது இறந்து விட்டார். எப்போது இறந்தார் என்றால் சுமார் 4 வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் யார் யார் என்றால் சண்முகம், மணிகண்டன் ஆகியோர்கள் ஆவார். பெரியண்ணனின் மனைவி பெயர் தனலட்சுமி. பொன்னம்மாள் என் தாயார்.

2) பெரியண்ணனுக்கும், தனலட்சுமிக்கும் பிறந்த குழந்தைகள் மொத்தம் 6 நபர்கள். அவர்களது பெயர்கள் என்னவென்றால் ராணி, சுதந்திர வனிதா, புனிதவள்ளி, சந்திரமேகலா, சண்முக குமார், மணிகண்டன் ஆகியோர்கள் ஆவார்கள். சுப்ரமணி என்பவர் என்னுடைய மற்றொரு அண்ணன் ஆவார்.

3) இவ்வழக்கில் மொத்தம் 18 நபர்களை பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கிட்டுள்ளேன். மேற்படி 18 நபர்கள் யார் யார் என்றால் என்னுடைய பெரியப்பாக்கள் சித்தன், சின்னப்பன் மற்றும் அவர்களது வாரிசுகள் ஆகியோர்கள் ஆவார்கள். நான் மேற்படி சித்தன் மற்றும் சின்னப்பனை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக காட்டியுள்ளேன் என்றால் காட்டியுள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்யும்பொழுது சித்தன் மற்றும் சின்னப்பன் இறந்துவிட்டார்கள்.

4) இவ்வழக்கு நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் என்னிடம் தடம் கேட்டனர், நாங்கள் அதனால் இவ்வழக்கை போட்டுள்ளேன். இவ்வழக்கில் எந்தெந்த சர்வே எண்களுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.247/1, சர்வே எண்.248/1B, சர்வே எண்.248/A13 ஆகிய சர்வே எண்களுக்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

5) சர்வே எண்.247/1ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 74 செண்ட்டுகள். சர்வே எண்.248/A13 ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 53 செண்ட்டுகள். சர்வே எண்.248/1B ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 91 செண்ட்டுகள். சர்வே எண்.248/2 ல் வழித்தடம் உள்ளது.

(1 முதல் 6, 10 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.